**செ.வெ.எண்: 21** **நாள்: 12.03.2019**

# நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு கோயம்புத்தூர் நாடாளுமன்ற தொகுதி வாக்கு எண்ணும் மையமானஅரசு தொழில்நுட்ப கல்லூரியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி, இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

-----------

நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு முன்னேற்பாடு பணிகள் மேற்கொள்ளவது தொடர்பாக கோயம்புத்தூர் நாடாளுமன்ற தொகுதி வாக்கு எண்ணும் மையமான அரசு தொழில்நுட்ப கல்லூரியில் இன்று (12.03.2019) கோயம்புத்தூர் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி, இ.ஆ.ப., அவர்கள், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இவ்வாய்வின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இராமதுரைமுருகன், மாநகர காவல் துணை ஆணையர் திரு.சரவணன்பாலாஜி மாநகராட்சி துணை ஆணையர் திரு.பிரசன்னாராமசாமி., வடக்கு கோட்டாட்சியர் திரு.டெய்ஸிகுமார், உதவி ஆட்சியர்(பயிற்சி) செல்வி.சினேகா, இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(தேர்தல்) திரு.நாராயணன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் திரு.விஜயதுரை, மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். பின்னர் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில்,

நாடாளுமன்றத் தேர்தலின் போது கோவை நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட கோவை வடக்கு, கோவை தெற்கு, சிங்காநல்லூர் கவுண்டம்பாளையம், சூலூர், பல்லடம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் பதிவாகும் வாக்குப்பதிவு இயந்திரங்களை கோயமுத்தூர் அரசினர் தொழில்நுட்பக் கல்லூரியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு எண்ணப்பட உள்ளது.

பொதுமக்கள் தங்களது வாக்குகளை பதிவு செய்யும் பொழுது யாருக்கு, எந்த சின்னத்திற்கு வாக்கு பதிவு செய்துள்ளோம் என்பதை 7 வினாடிகள் அறிந்து கொள்ளும் விதமாக VVPAT என்னும் புதிய தொழில்நுட்பம் இந்த தேர்தலில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. மக்கள் அறிந்துகொள்ளும் விதமாக வட்டாட்சியர்,

கோட்டாட்சியர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் இத்தொழில்நுட்பம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், வாக்கு எண்ணும் மையத்தில் வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பு அறை, வாக்கு எண்ணும் அறை, பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆகியவற்றை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. வாக்கு எண்ணிக்கையின் போது வேட்பாளர்களின் முகவர்கள் உரிய வழியில் சென்று வர ஏதுவாக தடுப்புகள் அமைப்பது தொடர்பாக அலுவலர்களிடம் உரிய ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**